## சூழலுக்குப் பொருத்தமான பழமொழிகளைத் தேர்ந்தெடுத்திடுக.

1. கோமதி தேவைக்கு ஏற்பச் சிக்கனமாகச் செலவு செய்வார். ஆடம்பர வாழ்க்கையைவிடச் சிக்கனமான வாழ்வையே விரும்புவார். அதனால்தான் அவர் பிறர் போற்றும் வண்ணம் சிறப்பாக வாழ்கிறார்.

_______________________________________________

2. கோயில் நகையைத் திருடிய முத்து ஓரிரு தினங்கள் மன நிம்மதியின்றி இருந்தான். அவன் மனசாட்சி அவனை எப்பொழுதும் வருத்திக்கொண்டிருந்தது.

_______________________________________________

3. பாலன் இரவு பகல் பாராமல் உழைத்து வாழ்க்கையில் முன்னேற வேண்டும் என உயர்வெண்ணம் கொண்டான். எனவே, அநாவசிய செலவுகளைச் செய்யாமல் தன் வருமானத்தைச் சேமித்து வைத்தான்.

_______________________________________________

4. மாலைப் பொழுதில் சிவா வீட்டின் முன் பந்து விளையாடிக் கொண்டிருந்தான். திடீரென்று, அவன் உதைத்த பந்து அவனது அண்டை வீட்டுக்காரரின் சன்னலை உடைத்தது. அண்டை வீட்டுக்காரரின் கோபத்திற்கு ஆளாகக் கூடாது என்பதற்காக அவன் அச்செயலை, தான் செய்யவில்லை என்றான். ஆனால் அவன் மனசாட்சி அவனைத் தினமும் கொன்று வருகிறது.

_______________________________________________

https://t.me/learntamilbyparamesvariperisamy

LIVEWORKSHEETS